பெருநகர சென்னை மாநகராட்சியின் சென்னை பள்ளி மாணவ, மாணவியருக்கு இந்தியாவில் "ரஷ்ய மொழி நாட்கள் திட்டத்தில் ரஷ்ய மொழியினை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சியினை மேயர் திருமதி ஆர்.பிரியா நேற்று (24.11.2023) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் தொடங்கி வைத்துப் பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் துணை ஆணையாளர் (கல்வி) திருமதி ஷரண்யா அறி, நிலைக்குழுத் தலைவர் (கல்வி) த.விசுவநாதன், ரஷ்ய தூதரகத்தின் துணைத் தூதரும், சென்னை ரஷ்ய அறிவியல் மற்றும் கலாச்சார மைய இயக்குநருமான அலெக்ஸாண்டர் டொடோனோவ் (Mr.Alexander Dodonov), ரஷ்ய மொழி நிறுவனம், ரஷ்யாவின் மக்கள் நட்பு பல்கலைக்கழகத்தின் மூத்த விரிவுரையாளர் டாக்டர் அலிமோவா மரியா (Dr. Alimova Maria), இணைப் பேராசிரியர் டாக்டர் கோஸ்லோவ்ஸ்கயா எகடெரினா (Dr. Kozlovskaya Ekaterina) மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை மாநகராட்சி பள்ளிகளில் ரஷ்ய மொழி பயிற்றுவிக்கும் நிகழ்ச்சி!

மேயர் ஆர்.பிரியா தொடங்கி வைத்தார்!

சென்னை,நவ.25-

இந்தியாவில் "ரஷ்ய மொழி நாட்கள்" திட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சென்னை பள்ளி மாணவ, மாணவியருக்கு ரஷ்ய மொழியினை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சியினை மேயர் ஆர்.பிரியா நேற்று தொடங்கி வைத்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் சென்னை பள்ளி மாணவ, மாணவியருக்கு இந்தியாவில் "ரஷ்ய மொழி நாட்கள்" திட்டத்தின் ஒரு பகுதியாக "சென்னையில் ரஷ்ய மொழி நாட்கள்" என்ற நிகழ்ச்சியின் மூலம் ரஷ்ய மொழியினை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சியினை மேயர் திருமதி ஆர்.பிரியா நேற்று (24.11.2023) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்து உரையாற்றினார்.

ரஷ்யாவின் மக்கள் நட்பு பல்கலைக்கழகத்தின் ரஷ்ய மொழி நிறுவனம் (RUDN பல்கலைக்கழகம்) மற்றும் சென்னையில் உள்ள ரஷ்ய அறிவியல் மற்றும் கலாச்சார மையம் ஆகியவற்றின் சார்பில் பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளைச் சேர்ந்த 150 மாணவர்களுக்கு "சென்னையில் ரஷ்ய மொழியின் நாட்கள்" என்ற நிகழ்ச்சியில் ரஷ்யாவின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சாரம் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

இந்த நிகழ்வின் போது, RUDN பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள், ரஷ்ய மொழி நிறுவனம், ரஷ்யாவின் மக்கள் நட்பு பல்கலைக்கழகம் மற்றும் ரஷ்ய மொழி நிறுவனத்தின் மூத்த விரிவுரையாளர் ஆகியோர் ரஷ்ய மொழியில் கலந்துரையாடும் திறந்த வகுப்பை நடத்தினர். மெட்ராஸ் பல்கலைக்கழகம் மற்றும் அதனுடன் இணைந்த கல்லூரிகளின் மாணவர்கள், ரஷ்ய அரசாங்க உதவித்தொகை திட்டம் பற்றிய தகவல்களை அறிமுகப்படுத்தினர். ரஷ்யா, ரஷ்ய கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சாரம் ஆகியவை விளக்கக்காட்சியின் மூலம் மாணவர்களுக்கு விளக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் துணை ஆணையாளர் (கல்வி) திருமதி ஷரண்யா அறி, நிலைக்குழுத் தலைவர் (கல்வி) த.விசுவநாதன், ரஷ்ய தூதரகத்தின் துணைத் தூதரும், சென்னை ரஷ்ய அறிவியல் மற்றும் கலாச்சார மைய இயக்குநருமான அலெக்ஸாண்டர் டொடோனோவ் (Mr.Alexander Dodonov), ரஷ்ய மொழி நிறுவனம், ரஷ்யாவின் மக்கள் நட்பு பல்கலைக்கழகத்தின் மூத்த விரிவுரையாளர் டாக்டர் அலிமோவா மரியா (Dr. Alimova Maria), இணைப் பேராசிரியர் டாக்டர் கோஸ்லோவ்ஸ்கயா எகடெரினா (Dr. Kozlovskaya Ekaterina) மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

காஞ்சிபுரம் மாநகராட்சியில் பெரியார் நினைவு தூண் அருகில் சேலம் இளைஞர் அணி இரண்டாம் மாநில மாநாடு இருசக்கர வாகன பிரச்சாரக் குழுவை மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. வரவேற்றார். உடன் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.எஸ்.சுகுமார், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் அ.யுவராஜ் மற்றும் மாவட்டத்திற்கு உட்பட்ட மாநகர, ஒன்றிய, பகுதி செயலாளர்கள், கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

சி.வி.எம்.பி.எழிலரசன் தலைமை! தி.மு.க. மாணவர் அணி சார்பில்-குற்றாலத்தில்

மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்களுக்கான மூன்று நாள் கருத்தியல் பயிலரங்கம் !

பேராசிரியர் சுப.வீரபாண்டியன் - கம்பம் செல்வேந்திரன் - த.சோழராஜன் சிறப்புரை!

தென்காசி, நவ.25-

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் சிந்தனை, சொல், செயல் வடிவமாய் விளங்கும் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு, தி.மு.க. மாணவர் அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்களுக்கு மூன்று நாள் கருத்தியல் பயிலரங்கம், தென்காசி மாவட்டம், குற்றாலம், ராயல் கிரீன் ரிசார்டின் வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நேற்று (24.11.2023) காலை 10.30 மணியளவில் கழக மாணவர் அணி துணைச் செயலாளர் அதலை பி. செந்தில்குமார், வரவேற்புரை வழங்கினார். பேராசிரியர் சுப. வீரபாண்டியன் பங்கேற்று சிறப்பித்தார்.

நிகழ்ச்சிக்கு, வருகைத் தந்த அனைவரையும் கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ., தலைமை ஏற்று பயிலரங்கத்தின் நோக்கத்தை விளக்கி எடுத்துரைத்தார்.

நிகழ்ச்சிக்கு, கழக மாணவர் அணியின் மாநில நிர்வாகிகள் இரா. ராஜீவ்காந்தி, சி.ஜெரால்டு, எஸ். மோகன், மன்னை த. சோழராஜன், சேலம் ரா. தமிழரசன், பி.எம்.ஆனந்த், கா.பொன்ராஜ், பூர்ண சங்கீதா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில், கழக மாணவர் அணி துணைச் செயலாளர் வி.ஜி. கோகுல் நன்றியுரை வழங்கினார்.

கருத்தியல் பயிலரங்கத்தின் முதல் அமர்வில் மன்னை த. சோழராஜன் நெறியாளராக நிகழ்வினை தொகுத்து வழங்க, "திராவிட இயக்கமும், மொழிப் போரும்" எனும் தலைப்பில் கழகத் தேர்தல் பணிக்குழுச் செயலாளர் கம்பம் பெ. செல்வேந்திரன் வகுப்பு எடுத்தார்.

இரண்டாம் அமர்வில் கா. அமுதரசன் நெறியாளராக நிகழ்வினை தொகுத்து வழங்க, "பாலினச் சமத்துவம்" எனும் தலைப்பில் தோழர் மதிவதனி வகுப்பு எடுத்தார்.

மூன்றாம் அமர்வில் ஜெ. வீரமணி நெறியாளராக நிகழ்வினை தொகுத்து வழங்க, "திராவிட இயக்கமும் ஊடகவியலும்" எனும் தலைப்பில் தோழர் செந்தில் வேல் வகுப்பு எடுத்தார்.

பயிலரங்கத்தில் மதுரை வடக்கு, மதுரை மாநகர், மதுரை தெற்கு, தேனி வடக்கு, தேனி தெற்கு, தெற்கு, விருதுநகர் வடக்கு, விருதுநகர் தெற்கு, இராமநாதபுரம், தூத்துக்குடி வடக்கு, தூத்துக்குடி தெற்கு, திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மத்திய, தென்காசி வடக்கு, தென்காசி தெற்கு, கன்னியாகுமரி கிழக்கு, கன்னியாகுமரி மேற்கு, விழுப்புரம் வடக்கு ஆகிய 17 மாவட்டங்களின் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் பங்கேற்றனர்.

திருவல்லிக்கேணி பகுதியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்

மெரினா கடற்கரையில் இழை படகுப்போட்டி!

ஏ.ஆர்.பி.எம். காமராஜ் அறிக்கை!

சென்னை, நவ.25-

திருவல்லிக்கேணி பகுதி கழகம் சார்பில் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு வட்டந்தோறும் கழக கொடியேற்றி இனிப்பு வழங்குதல் நிகழ்ச்சி 27.11.2023 திங்கட்கிழமை, காலை: 9.00 மணியளவில் நடைபெறுகிறது என பகுதிச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம். காமராஜ் தெரிவித்துளளார். இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

27.11.2023 திங்கட்கிழமை அன்று மாபெரும் இழை படகு போட்டி சென்னை மெரினா கடற்கரையில் நடைபெறயிருக்கின்றன.

போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசு: ரூ.1,00,000/ இரண்டாம் பரிசு : ரூ.50,000/, மூன்றாம் பரிசு : ரூ.25,000/ வழங்கப்படும்.

நலஉதவிகள் :

வட்டம், இடம், தலைமை விவரம்:-

115 (அ): தேவராஜ் தெரு- கே.ஜி.செந்தில்குமார், 115 (அ) வட்டச் செயலாளர், 116: அயோத்தியா நகர்

எஸ்.சசிகுமார், 116 வட்டச் செயலாளர்,

116 (அ): பி.வி.நாயக்கன் தெரு- ஜெ.விஜயக்குமார், 116 (அ) வட்டச் செயலாளர்,

119: வி.எம்.தெரு, அஜந்தா ஓட்டல் அண்ணா சிலை அருகில்- க.வே. மோகன் வட்டச் செயலாளர்

119 வட்டச் செயலாளர், 119 (அ) : லாயிட்ஸ் ரோடு- கே.பிரபு 119 (அ) வட்டச் செயலாளர்,

120: முத்தையா தெரு - ஐசிப் எம்.சங்கர்,120 வட்டச் செயலாளர், 120 (அ) : வி.ஆர்.பிள்ளை தெரு -என். ரவி,

120 (அ) வட்டச் செயலாளர், 120 (அ) : கஜபதி லாலா தெரு- ஆர்.ராஜ்குமார் மாவட்டப் பிரதிநிதி,

வட்டம், தேதி, இடம், நலத்திட்ட உதவிகள், தலைமை விவரம்:

120: 2.12.2023 சனிக்கிழமை - சுதந்திரா நகர்-நலத்திட்ட உதவிகள்- ஐசிஎப். எம்.சங்கர் 120வது வட்டச் செயலாளர்,

116 (அ): 03.12.2023 ஞாயிற்றுக்கிழமை- டி.பி. கோயில் தெரு,வேஷ்டி, சட்டை புடவை- ஜெ.விஜயகுமார் 116 (அ) வட்டச் செயலாளர்,

116 :03.12.2023 - ஞாயிற்றுக்கிழமை- வி.ஆர்.பிள்ளை தெரு- நலத்திட்ட உதவிகள் (ம) அறுசுவை உணவுகள் - எஸ்.சசிகுமார், 116வது வட்டச் செயலாளர்,

119: 10.12.2023 -ஞாயிற்றுக்கிழமை - பூரம் பிரகாம் தெரு நலத்திட்ட (ம) அறுசுவை உணவுகள் - க. வே.மோகன், வட்டச் செயலாளர்

120 (அ) :10.12.2023 ஞாயிற்றுக்கிழமை-இருசப்ப தெரு-நலத்திட்ட உதவிகள் (ம) அறுசுவை உணவுகள் என்.ரவி,120 (அ) வட்டச் செயலாளர்,

119 (அ) :17.12.2023- ஞாயிற்றுக்கிழமை- வி.எம். தெரு, நலத்திட்ட உதவிகள் கே.பிரபு,119 (அ) வட்டச் செயலாளர்,

115(அ) 17.12.2023 ஞாயிற்றுக்கிழமை-ஷேக்தாவுத் தெரு- நலத்திட்ட உதவிகள்- கே.ஜி.செந்தில்குமார் 115 (அ) வட்டச் செயலாளர்,

120 (அ) 17.12.2023 ஞாயிற்றுக்கிழமை-முனுசாமி நகர்-நலத்திட்ட உதவிகள்- இ.இளம்பாரதி, மாவட்ட அமைப்பாளர் ஆதிதிராவிடர் நலக்குழு,

116:17.12.2023 ஞாயிற்றுக்கிழமை-அயோத்தியா நகர் -நலத்திட்ட உதவிகள், எம்.கே.ஆனந்த் மாவட்ட அமைப்பாளர், மீனவர் அணி

, 116 :17.12.2023 ஞாயிற்றுக்கிழமை -மாட்டன்குப்பம்- நலத்திட்ட உதவிகள் - ஏ.விக்னேஷ்வரன் பகுதி அமைப்பாளர், மாணவர் அணி

மேலும் நிகழ்ச்சியில் கலந்துகொள்பவர்கள் வீ.பி. பொன்னரசு, ஆர்.என். துரை, அ. கா சுபேர்கான், வி.என். ராஜன், ப.பிரகாஷ், ஏ. விஜயராஜ், இ. இளம்பாரதி, கமலாசெழியன், ரவி ராஜ்குமார், எம்.கே. ஆனந்த், வி.தினேஷ்குமார், ம.தயாநிதி, கே. திருநாவுக்கரசு, சி. தினகரன், ரா. பத்மாவதி, எம். பிரேம்ராஜா, ஐசிஎப்.சங்கர், ஜெ.விஜயகுமார், க.வே. மோகன், என். ரவி,கே.பிரபு, கே.ஜி. செந்தில்குமார், எம். கலில்ரகுமான், பச்சையப்பன், ஆர். சசிகுமார், வெ.சீனிவாசன், ஆர். கஜேந்திரன், எல். துளசிராமன், எஸ். விஜயகுமார், ஏ.பி.வேலு,ஆர். ராஜ்குமார் ஆகியோர் கலந்துகொள்கிறார்கள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

சென்னை தெற்கு மாவட்ட கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை சார்பில்

நாட்டுப்புற இசை விழா: அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைக்கிறார்!

எம்.எஸ்.ஹரிபாபு தலைமை! எம்.கிருஷ்ணமூர்த்தி - இரா.துரைராஜ் முன்னிலை!

வாகை சந்திரசேகர் - தமிழச்சி தங்க பாண்டியன் எம்.பி. பங்கேற்பு!

சென்னை, நவ.25

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்ட கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை சார்பில் ஆந்தகுடி இளையராஜா குழுவினர் வழங்கும் நாட்டுப்புற இன்னிசை விழாவினை அமைச்சர் மா.சுப்ரமணியன் இன்று (25.11.2023) தொடங்கி வைக்கிறார்.

தலைமை எம்.எஸ். ஹரிபாபு - முன்னிலை எம். கிருஷ்ணமூர்த்தி எம்.சி., இரா. துரைராஜ் எம்.சி. -

நடிகர் வாகை சந்திரசேகர், தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

சென்னை தெற்கு மாவட்ட கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாவட்ட அமைப்பாளர் எம்.எஸ். ஹரிபாபு தலைமையிலும், சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும் பத்தாவது மண்டலக் குழுத் தலைவருமான எம். கிருஷ்ணமூர்த்தி, சைதை கிழக்கு பகுதி கழக செயலாளரும், பதிமூன்றாவது மண்டலக் குழுத் தலைவருமான இரா. துரைராஜ், ஆகியோர் முன்னிலையில் , சைதாப் பேட்டை வி.ஜி.பி. சாலையில் உள்ள அன்னை வேளாங்கன்னி மகளிர் கலைக் கல்லூரி வளாகத்தில் இன்று (25.11.2023 - சனிக்கிழமை) மாலை 5 மணியளவில் ஆந்தகுடி இளையராஜா குழுவினர் வழங்கும் நாட்டுப்புற இன்னிசை விழாவான நற்றமிழ் நாயகருக்கு நாட்டுப்புற பாட்டரங்கம் நிகழ்ச்சியை சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன், நிகழ்ச்சியை தொடங்கி வைக்க உள்ளார்.

இந்நிகழ்வில் கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை தலைவர் நடிகர். வாகை சந்திரசேகர், துணைத் தலைவரும் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான முனைவர். திருமதி, தமிழச்சிதங்க பாண்டியன், பெருநகர சென்னை மாநகராட்சியின் துணை மேயர் மு. மகேஷ் குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ச. அரவிந்த்ரமேஷ், ஏ.எம்.வி. பிரபாகர்ராஜா, காரம்பாக்கம் க.கணபதி,

கழக நிர்வாகிகள் எஸ். குணசேகரன், க.தனசேகரன் எம்.சி, க.சோமு, பி.மணிமாறன் எம்.சி, கவிஞர் காசி முத்துமாணிக்கம், த.விஸ்வநாதன் எம்.சி, மு. மனோகரன், எஸ். பாஸ்கர் எம்.சி, வாசுகிபாண்டியன், பகுதி கழக செயலாளர்கள் - ஒன்றிய கழக செயலாளர்கள் கே.கண்ணன் எம்.சி, மு.ராசா எம்.சி, எஸ்.வி. ரவிச்சந்திரன் எம்.சி, வி.இ. மதியழகன் எம்.சி, சு. சேகர், துரைகபிலன், நொளம்பூர் வே.ராஜன், கோவில்பாக்கம்

ஜி. வெங்கடேசன், அயப்பாக்கம் அ.ம.துரைவீரமணி, பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், வழக்கிறஞர் எம். ஸ்ரீதர் எம்.சி, சைதைசம்பத், மின்னல்கந்தப்பன், மாவட்ட அமைப்பாளர்கள், சைதை சாதிக், நா.மணிகண்டன், அஞ்சல்ராமன், கோ. பாஸ்கர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், ஆர்.கிருஷ்ண குமார், கோட்டூர் எஸ்.பிரகாஷ், சைதை மேற்கு பகுதி கழக நிர்வாகிகள் களக்காடி எல்லப்பன், த.சம்பத், ஆர். ரமேஷ், வி.பி.ஜானகிராமன், கவிதாகௌதமன், வட்டக் கழக செயலாளர்கள் சை.மு.சேகர், ந.தமிழரசு, எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, அட்கோ கமலநாதன், மாவட்ட பிரதிநிதிகள் கு.புகழ்வேந்தன், டி. என்.சிவமணி,

கிண்டி செல்வம், ஜி.கே. ராமச்சந்திரன், வீ.மதி வாணன், பொன்ஜெய்சிங், ஆர்.ரவி, பால்கார் ரவி, ஜி.பாபு ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர். மாவட்ட துணை அமைப்பாளர்கள், ஆர்.ஜாரு ஆனந்த், எஸ். ரவிந்தர குமார், ஓ.சுந்தரம், பா.பாலமுருகன், அ.ப.குமரன், ஆ.மகாதேவன், ஜி. ஸ்ரீதர், ஆர். சுரேஷ், என்.கமலக் கண்ணன், பூ.ஜெயவேல், எம்.எஸ்.கார்த்திக், எஸ். மாரிமுத்து, என்.மணிவண்ணன், ஆர்.பிரபாகரன், சே.அருண், கே.நாராயணன் மற்றும் அனைத்து அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், பகுதி துணை அமைப்பாளர்கள், பகுதி பிரதிநிதிகள், வட்ட செயற்குழு உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

இந்நிகழ்வின் இறுதியாக பேரவையின் மாவட்ட துணைத் தலைவர் வெ.புருஷோத்தமன் நன்றி கூறுகிறார்.

38வது வட்டத்தில் வாக்காளர் சரிபார்க்கும் பணி!

நேதாஜி யு.கணேசன் வேண்டுகோள் !

சென்னை நவ:25

ஆர்.கே.நகர் மேற்கு பகுதி 38வது வட்டத்தில் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் முகாம் நடைபெறுகிறது.இது குறித்து வட்ட கழக செயலாளர் நேதாஜி யு.கணேசன் எம்.சி, விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு :

சென்னை வடக்கு மாவட்டம்,ஆர்.கே.நகர் மேற்கு பகுதி 38வது வட்டத்தில் எனது,வட்டக கழக செயலாளர் நேதாஜி யு. கணேசன் எம்.சி,தலைமையில் வாக்காளர் சரி பார்க்கும் பணி (இன்று 25.11. 2023 சனிக்கிழமை) நாளை(26 .11.2023 ஞாயிற்றுக்கிழமை) ஆகிய இரண்டு நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை வாக்குச் சாவடி மையங்களில் நடைபெறுகிறது.

நமது 38வது வட்டத்தில் 16 பாகங்கள் உள்ளது நேதாஜி நடுநிலைப் பள்ளியில் நேதாஜி நகர் 5வது தெருவில் 5 பாகங்களும்.

சீதாக்காதி மெட்ரிகுலேஷன் உயர்நிலைப் பள்ளியில் நேதாஜி நகர் 3வது தெரு 4 பாகங்களும்

அறிஞர் அண்ணா நடுநிலைப்பள்ளியில் நேதாஜி நகர் 1வது தெரு 4 பாகங்களும் இ.சி.ஐ. மெட்ரிகுலேஷன் உயர்நிலைப்பள்ளி எண்ணூர் நெடுஞ்சாலையில் 3 பாகங்களும் உள்ள பட்டியல் வாக்காளர்கள் புதிதாக பெயர் சேர்த்தல், நீக்குதல், திருத்தம்,முகவரி மாற்றம்,இரட்டை பதிவு புகைப்படம் மற்றும் ஆகிய பணிகளை செய்திட வட்டக் கழக நிர்வாகிகள் பி.எல்.ஏ2 பாக உறுப்பினர்கள், பகுதி , மாவட்ட,பகுதி, பிரதிநிதிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்,சார்பு மன்ற நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் கழக செயல்வீரர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு பணியாற்றிட வேண்டுகின்றேன்.

மேற்கண்ட நிகழ்வில் பார்வையார்களாக மாவட்டச் செயலாளர் தா.இளையஅருணா, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, தொகுதி பொறுப்பாளர் நந்தனம் நம்பிராஜன்,பகுதி கழக செயலாளர் எஸ்.ஜெபதாஸ் பாண்டியன் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

இவ்வாறு நேதாஜி யு. கணேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. தலைமை!

சென்னை மேற்கு மாவட்ட வர்த்தக அணி நிர்வாகிகள் கூட்டம்!

மாவட்ட அமைப்பாளர் ஏ.விஜயராஜ் அறிக்கை!

சென்னை, நவ. 25

சென்னை மேற்கு மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஏ.விஜயராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை மேற்கு மாவட்ட வர்த்தக அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் இன்று (25.11.2023 சனிக்கிழமை) காலை 10 மணி அளவில், மாவட்டக் கழக அலுவலகம் எண். 29/32, காம்தார் நகர், முதல் தெரு, நுங்கம்பாக்கத்தில் நடைபெறுகிறது.

சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. தலைமையில் திருவல்லிக்கேணி பகுதிக் கழகச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் எம்.சி, மாவட்ட வர்த்தக அணித் தலைவர் மெய்சரவணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் ஆலோசனை கூட்டத்திற்கு மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக இளைஞர் அணி செயலாளர் பிறந்தநாள் விழா மற்றும் நீட் விளக்கு இலக்கு கையெழுத்து இயக்கம் மற்றும் கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு சென்னை மேற்கு மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஏ.விஜயராஜ் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், பம்மல் தெற்கு பகுதி தி.மு.க.சார்பில் பகுதி செயலாளர் மண்டலக் குழுத் தலைவர் வே.கருணாநிதி ஏற்பாட்டில் பகுதி அவைத் தலைவர் ப.காளீஸ்வரன் தலைமையில்,பகுதி பொருளாளர் ஆர்.உமாசங்கர், பகுதி துணை செயலாளர் பன்னீர்செல்வம், பா.கவிதா, துரை இளங்கோவன், பி.ஜே.வேந்தன், ரா.கோகுல் ஆகியோர் முன்னிலையில் வட்ட கழக செயலாளர் வி.எஸ்.ஜெகநாதன் வரவேற்புரையில் பம்மல் தெற்கு பகுதி செயற்குழு மற்றும் BLA2,BLC உறுப்பினர்கள் கூட்டம் அன்சாரி மஹாலில் நடைபெற்றது.கூட்டதில் பல்லாவரம் தொகுதி பார்வையாளர் மாநில மருத்துவரணி துணை செயலாளர் ச.ரமேஷ்,பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் மாவட்ட துணை செயலாளர் இ.கருணாநிதி, மாவட்ட கழகத்தினால் நியமிக்கப்பட்ட பார்வையாளர்கள் துணை மேயர் கோ.காமராஜ், அ. ராமச்சந்திர ராஜா ஆகியோர் ஆலோசனை வழங்கி வட்ட கழக செயலாளர்களிடம் வாக்களர் பட்டியலும் தேர்தல் பணி செய்ய தேவையான பொருட்களும் ஒரு தொகுப்பாக வழங்கினர். கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது.